

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.6.2024) முகாம் அலுவலகத்தில், “நான் முதல்வன்” மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U. S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தில் இங்கிலாந்தின் டர்ஹம் பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் நேரடி பயிற்சி பெற்று தாயகம் திரும்பிய 25 மாணவ, மாணவியர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்த நிகழ்வின்போது, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியாவிற்கான இயக்குநர் திருமதி. ஜனக புஷ்பநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ்

# இங்கிலாந்து சென்று திரும்பிய மாணவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜூன் 19-

“நான் முதல்வன்” திட்டத்தின்கீழ் இங்கிலாந்து சென்று திரும்பிய மாணவர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான “நான் முதல்வன்” திட்டமானது. கடந்த 1.3.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது, இந்த மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டமானது ஈராண்டுகளைக் கடந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று, வேலைவாய்ப்புகளையும் பெற்று வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக, நான் முதல்வன் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இணைந்து நடத்திய S.C.O.U.T (Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல்வேறு கல்லூரிகளில் இருந்து மொத்தம் 1267 விண்ணப்பங்கள் வந்தநிலையில், அவற்றிலிருந்து 100 மாணாக்கர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதலில் 24 மணி நேர ஆன்லைன் பயிற்சியில் பங்கேற்று, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 மாணவர்களும், 14 மாணவியர்களும், ஜூன் 9 முதல் 16 வரை இங்கிலாந்தின் Durham பல்கலைக்கழகத்தில் தரவு அறிவியல் (Data Science) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆகிய முன்னணித் துறைகளில் ஒரு வார காலம் நேரடியாகப் பயிற்சி பெற்றனர்.

இத்திட்டம் தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான கல்லூரி மாணவர்களுக்குச் சர்வதேச அனுபவம் மற்றும் மேம்பட்ட திறன்களைப் பெறுவதற்கான அரிய வாய்ப்புகளைத் தந்துள்ளது.

இத்திட்டத்திற்காக, மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களின் பயணம், தங்குமிடம் மற்றும் பயிற்சி முதலிய செலவுகளை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து ஏற்றுக் கொண்டுள்ளன.

S.C.O.U.T பயிற்சி பெற்று தமிழ்நாடு திரும்பிய இந்த 25 மாணவர்களும், நேற்று முன்தினம் (17.6.2024) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் நேரில் சந்தித்து தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, அவர்களின் வாழ்த்துகளையும் பெற்றனர். இவர்களில் 20 மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். அவர்களில் சுஜாதா குப்புசாமி மற்றும் கிருத்திகா துளசிமணி ஆகிய 2 மாணவிகள் “புதுமைப் பெண்” திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர்1 நா.முருகானந்தம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னசென்ட் திவ்யா, பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்தியாவிற்கான இயக்குநர் திருமதி ஜனக புஷ்பநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தலைமையில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

# காரைக்குடியில் முனைவர் கோவி. செழியன் தலைமையில் பட்டிமன்றம்!

## மு.தென்னவன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, ஜூன்19-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர தி.மு.க. 16ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது.

காரைக்குடி மாநகர மேயரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான எஸ். முத்து துரை, மாவட்ட அவைத்தலைவர் அ. கணேசன், முன்னாள் எம்.எல்.ஏ., சுப.துரைராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் திருமதி ஜோன்ஸ் ருசோ, கே.எஸ்.எம்.மணிமுத்து, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், நிர்வாகிகள் சுப்பையா, உதயம் ராஜூ, லட்சுமி ராஜ் கணேஷ், பெரி.வயிரவன், சே.சொக்கலிங்கம், அன்பு என்ற சேவியர், போஸ் குணசேகரன், குழ.ஜான் கென்னடி, இராம.அன்பழகன், மெ. பழனியப்பன், துரை. நாகராஜ், காரை சுரேஷ், பா. கணேசன்,

மாமன்ற உறுப்பினர்கள் எம்.கார்த்திகேயன், எஸ். மைக்கேல், ஹேமலதா செந்தில், தெய்வான இளமாறன், கலா. காசிநாதன், நாச்சம்மை சிவாஜி, எஸ் முகமது சித்திக், ஜெ.பிலோமீனா, சுப.ஹரிதாஸ் ஹரிதாஸ் ராணி ஜெய்த்துன் சேட், சந்தியா கார்த்திகேயன், திவ்யா சக்தி, விஷ்ணு பெருமாள், எஸ். பூமிநாதன் மலர்விழி பழனியப்பன், லில்லி திரேசு அருள்ராஜ், தனம் சிங்கமுத்து, ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

மாநகர துணை மேயரும் காரைக்குடி நகர் கழகச் செயலாளருமான என்.குணசேகரன் வரவேற்றுப் பேசினார். கலைஞர் நூற்றாண்டு நிறைவு நாள் பட்டிமன்றத்தினை முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் .

அரசு கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. தலைமையில் கலைஞர் ஊட்டிய உணர்வே என்ற தலைப்பில் கரூர் முரளி, சரத்பாலா, கலைஞர் தீட்டிய திட்டங்களே என்ற தலைப்பில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, சைதை சாதிக், ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

மாநகர துணை செயலாளர் சொ. கண்ணன் நன்றி கூறினார்.

பட்டிமன்ற நிகழ்ச்சி ஏற்பாடுகளை காரைக்குடி மாநகர செயலாளர் என். குணசேகரன் தலைமையில் காரைக்குடி நகர்கழக நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.



இந்தியா கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா ஆகியோருக்கு வீரவாள் வழங்கினர். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ., தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள் உள்ளனர்.

# ‘நீட்’ எனும் அரக்கனை ஒழித்துக்கட்டுவோம்!

இந்தியா முழுவதும் கடந்த ஐந்தாம் தேதி நடந்த ‘நீட்’ தேர்வில் நாடு முழுவதும் நீட் தேர்வின் கேள்வித்தாள்கள் முன்கூட்டியே கசிந்ததாகவும் வெளியிலும் கிடைத்ததாலும் இதுகுறித்த முறைகேடுகள் பற்றி பீகார் மாநிலத்தின் கூடுதல் டி.ஜி.பி. ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

கேள்வித்தாள் எப்படி மாணவர்களுக்கு கிடைத்தது. யார் கொடுத்தது என காவல்துறை விசாரணை நடத்தி மாணவர்கள் உடந்தையாக இருந்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இதேபோல் மகாராஷ்டிராவிலும் ‘நீட்’ தேர்வில் முறைகேடுகள் நடந்துள்ளது. மறு தேர்வு நடத்த வேண்டும், இந்த குளறுபடிகள் நிறைந்த தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று மகாராஷ்டிரா அரசு ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீட்டுக்கு எதிராக மாணவர்களே நாடுமுழுவதும் போராட்டம் நடத்துகிறார்கள் இதே போல் இந்தியா முழுவதும் ஒவ்வொரு மாநில அரசுகளும் இந்த முறை நடந்த நீட் தேர்வில் தவறான அணுகுமுறை, நியாயமற்ற, நேர்மையற்ற, உண்மையில்லாத, கட்டுப்பாடற்ற, சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு ‘நீட்’ தேர்வில் முறையற்ற காலம் தாழ்ந்து தேர்வுக்கு வந்த மாணவர்களை அனுமதித்திருக்கிறார்கள் .


மாணவர்கள் தேர்வு எழுதும் பொழுது அவர்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள் அளித்ததாகவும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது வன்மையாக கண்டிக்கத் தக்கது. ஏற்றுக்கொள்ள முடியாது .

கடுமையான எதிர்ப்பு மூலம் 1653 நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியருக்கு மறுதேர்வு என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்தியா முழுவதும் கடுமையான எதிர்ப்பு குரல் ஒலிக்கிறது. இவர்களுக்கு மட்டும் தனியாக தேர்வு எந்த அடிப்படையில் எப்படி நடத்த முடியும். எந்த கேள்வித்தாளுக்கு தேர்வு நடத்துவது, பதில் சொல்ல முடியுமா? இந்தக் கேள்வித்தாள் எப்படி வெளியில் வந்தது, யாரால் வந்தது, இதற்கு மூலகாரணம் யார் என்பதை ஒன்றிய அரசு கல்வித்துறை பகிரங்கமாக நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்

அதே நேரத்தில் ‘நீட்’ தேர்வு நடத்தும் மையங்களில் முறையாக நடைமுறை அமல்படுத்தவில்லை ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் வித்தியாசமான நடைமுறைகளை அங்கு இருந்த அதிகாரிகள் கடைப்பிடித்து இருக்கிறார்கள்.

நீட் தேர்வில் இதுவரை இல்லாத வகையில் முறைகேடுகள் நடந்துள்ளன. யாரெல்லாம் தவறு செய்தார்களோ, அவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும். இந்தியாவில் லட்சக்கணக்கான மாணவ - மாணவியரின் வாழ்க்கை பிரச்சினை, அவர்களுடைய எதிர்கால பிரச்சினை, அவர்களுடைய முன்னேற்றமே தடை படுகிற விதத்தில் நீட் இப்பொழுது மிக மோசமான ஒரு தேர்வு என்கிற அடிப்படையில் நடந்திருக்கிறது



**கோவை**
**கே.செல்வராஜ்**
தலைமைக் கழக
செய்தித் தொடர்பு
துணைச் செயலாளர்

இந்த தவறை கண்டுபிடிக்க சி.பி.ஐ. விசாரணை வேண்டும். கட்டாயம் இந்த நீட் தேர்வின் குளறுபடிகளை அடியோடு களைய நீட்டை தடை செய்து

அந்தந்த மாநில அரசுகளே நேரடியாக பள்ளி இறுதி படிப்பில் தேர்வின் அடிப்படையில் முந்தைய நிலைப்பாட்டில் தேர்வு நடத்தி மருத்துவம். பொறியியல் படிக்கும் மாணவ - மாணவியருக்கு எதிர்காலத்தை முழுமையாக நிர்ணயித்துக் கொடுக்க ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு முழு அதிகாரத்தை கல்வித்துறையில் கொடுக்க வேண்டும்.

அதுதான் நிலையான நல்ல ஒரு முடிவாக இருக்கும். அதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சர், பிரதமர் அவர்களோடு பேசி முடிவு எடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் இந்திய நாட்டின் மருத்துவத் துறை என்பது முழுமையாக ஒரு அடிப்படை ஆதாரம் இல்லாத வியாபார துறையாக மாறிவிடக்கூடாது என்பதுதான் ஒட்டுமொத்த இந்திய மக்களின் கவலை. அதுதான் மாநில அரசுகளின் கவலை, அந்தந்த மாநில அரசுகளே மருத்துவக் கல்லூரிகள் மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்குகிறது, பராமரிக்கிறது, முழுமையாக கட்டமைப்பை அமைத்து கொடுக்கிறது .

அப்படி மாநில அரசின் அந்தந்த மாநில மக்களின் வரிப்பணத்தில் செயல்படுத்துகிற மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றிய அரசு நேரடியாக நீட் என்கிற பெயரில் தலையிடுவதை ஒரு நாளும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பொழுது இந்தியா முழுவதும் இருக்கிற அனைத்து மாநில அரசுகளும் கடுமையாக நீட்டை எதிர்க்கிறது, இந்த நேரத்தில் இந்திய அரசு தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றி கல்வித் துறையை மாநிலங்களுக்கே மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுதான் நிரந்தர தீர்வாக இருக்கும் என்பது ஒட்டுமொத்த இந்திய மக்களின் எண்ணமும் நம்பிக்கையும் ஆகும்.

நீட் தேர்வுக்கு தயாராகும் மாணவ - மாணவியர்களில் பயிற்சி கொடுக்கும் நிலையங்கள் என்ற பெயரில் பயிற்சி நிலையங்கள் நடத்துபவர்கள் ஒவ்வொரு தினசரி பத்திரிகைகளில் சுமார் 25 லட்சம் ரூபாய் வரை ஒரு முறை விளம்பரத்திற்கு நாடு முழுவதும் முதல் பக்கத்தில் முழு பக்கம் விளம்பரம் கொடுக்கிறார்கள். இப்படி செலவு செய்கிறார்கள் என்றால் அந்தப் பயிற்சி நிறுவனம் எவ்வளவு பணம் மாணவ, மாணவியரிடம் பெற்றிருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு பயிற்சி நிறுவனங்களும் குறைந்தது ஒரு மாணவரிடம் மாதம் ஒரு லட்ச ரூபாய் என்ற அடிப்படையில் பணம் வாங்குவதாக தகவல் தெரிகிறது. ஒரு வகுப்பறையில் முப்பது மாணவர்கள் இருந்தால் 30 லட்ச ரூபாய் மாத வருமானம் 5 வகுப்பறைகளில் 150 பேர் படித்தால் மாதம் ஒன்றரை கோடி ரூபாய் வருமானம் இப்படி பல கோடி ரூபாய்களை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் .

ஒருநிறுவனத்தில்படித்த ஆறு மாணவ-மாணவியருக்கு 720 க்கு 720 மார்க் அடிப்படையில் முதல் இடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளதாக தேர்வு பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளது. இது எப்படி சாத்தியமாகும். நாடு முழுவதும் கடுமையான குளறுபடிகள் நடந்து இருக்கிறது .

இதற்குத்தான் இந்தியாவிலேயே தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள் நீட் எப்பொழுது ஒன்றிய அரசு கொண்டு வந்ததோ அப்பொழுதே ஒன்றிய அரசை எதிர்த்து முதல் குரல் கொடுத்தவர் அன்றைய தமிழக எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள்.

2021ல் சட்டமன்றத் தேர்தலிலும் இந்த நீட் எனும் அரக்கனை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றுதான் முடிவு எடுத்து ஆட்சிக்கு வந்ததும் மரியாதைக்குரிய ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, இதில் இருக்கும் சாரம்சங்களை கண்டறிந்து நீட்டுக்கு எதிராக சட்டமன்றத்தில் சட்ட முன்வடிவை இயற்றி ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது .

அந்தச் சட்டத்தை ஆய்வும் செய்யாமல் ஒன்றிய அரசுக்கும் அனுப்பாமல் கிடப்பில் போட்டிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தை நாட வேண்டிய சூழ்நிலையில் தமிழக அரசு சட்டநடவடிக்கையில் இறங்க, நீதிமன்றம் கடுமையாக ஆளுநர்களுக்கு எதிராக தன்னுடைய தீர்ப்பை வழங்கியது .

நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு மீண்டும் ஒருமுறை சட்டமன்றத்தில் நீட்டுக்கு எதிரான தீர்மானங்கள் ஒருமனதாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரண்டாவது முறை ஆளுநருக்கு ஒரே நிலைப்பாட்டுக்கான தீர்மானம் நிறைவேற்றி கொடுத்தால் அரசனுடைய அந்த நிலைப்பாட்டை சட்ட முன் வடிவை ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியது ஆளுநரின் கடமை. அந்த அடிப்படையில் அவர் அனுப்பி வைக்க வேண்டும்.

அவருடைய செயல்பாடு என்ன என்பதை இன்னும் நாம் தெரிந்து கொள்ள முடியவில்லை. கல்வித்துறை என்பது 1975 வரை அந்தந்த மாநில அரசுகளே கல்விக்குரிய நடைமுறைகளை மாற்றியமைத்துக் கொள்வது, செயல்படுத்திக் கொள்வது,

மாநில அரசு கட்டுப்பாட்டிலேயே கல்வித்துறை முழுமையாக இந்தியா முழுவதும் அந்தந்த மாநில அரசுகளே நடைமுறைப்படுத்தி செயல்படுத்தி வந்தது .

1976 இல் ஒன்றிய அரசு தனது கட்டுப்பாட்டில் கல்வித்துறையை எடுத்துக் கொண்டதால் புதிதாக எந்த ஒரு கல்விக் கொள்கையில் மாற்றம் செய்வதாக இருந்தாலும் படிப்பில் மாற்றம் செய்வதாக இருந்தாலும் எந்த ஒரு நிலையான ஒரு முடிவு கல்வித் துறையில் எடுப்பது என்றால் ஒன்றிய அரசிடம் அனுமதி பெற வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு மாநில அரசுகள் சென்று ஒன்றிய அரசின் அனுமதியில்லாமல் எதையும் செயல்படுத்த முடியாத ஒரு நிலைப்பாடு இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் வந்ததன் காரணமாக தொடர்ந்து கல்வித் துறையில் மாநில அரசுக்கு எதிராக கலந்து ஆலோசிக்காமல் ஒன்றிய அரசு செயல்பட்டு கொண்டு வருகிறது.

பொறியியல் படிப்பு, மருத்துவப் படிப்பு, கல்லூரி படிப்பு என்று கல்லூரிகளில் படிக்கிற அனைத்து விதமான பாடத்திட்டங்களை மாற்றி அமைப்பதற்கு கூட ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டிய ஒரு நிலைப்பாடு இருக்கிறது. இந்த நிலையில் ஒன்றிய அரசு நாடு முழுவதும் இருக்கிற அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஒன்றிய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரி சிறப்பான நல்ல மருத்துவர்கள், மருத்துவக் கருவிகள், கட்டட அமைப்புகள், அறுவை சிகிச்சை உபகரணங்கள் உட்பட எல்லா விதத்திலும் முழுவதுமாக உட்கட்டமைப்போடு மாநிலம் முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், ஒன்றிய அளவில், நகர அளவில், தாலுக்காஅளவில் தரமான மருத்துவ சிகிச்சை கொடுக்கிற முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது. இங்கு அரசு மருத்துவக் கல்லூரியில் படிக்கிற மாணவ - மாணவியர் மருத்துவப் படிப்பில் மிக அற்புதமான படிப்பை பெற்று உலக அளவில் தமிழக மருத்துவர்கள் மருத்துவத் துறையில், மருத்துவர் ஆராய்ச்சி துறையில் மருந்துகள் கண்டுபிடிப்பதில் நோய்களை கண்டறிவதில், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்தல் போன்ற அற்புதமான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு உலகத்துக்கே வழிகாட்டியாக இருக்கிற மருத்துவ ஆய்வாளர்கள், மருத்துவர்கள் தமிழகத்திலிருந்து உருவாகி இருக்கிறார்கள்.

உலக நாடு முழுவதும் இப்பொழுதும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கிற பெருமையைப் பெற்ற தமிழக மருத்துவத் துறை அப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழகத்தில் இரண்டு ஆண்டு முழுவதும் பிளஸ் ஒன் பிளஸ் டூ படிப்பில் படித்து தேர்வு பெற்ற பிறகு ஒன்றிய அரசு செயல்படுத்துகிற நீட் தேர்வு புதிதாக மீண்டும் படித்து தேர்வு பெறவேண்டிய சூழ்நிலையை ஒன்றிய அரசு உருவாக்கி உள்ளது.

அதனால் கிராமப்புறத்து ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ - மாணவியர் சாதாரண பின் தங்கிய பட்டியல் இன மாணவ - மாணவியர் உட்பட ஏழ்மை நிலைமையில் இருக்கின்ற குடும்பத்தைச் சார்ந்த மாணவ மாணவியர் மருத்துவத் துறையில் படிக்க முடியாத ஒரு நிலையை ஒன்றிய அரசு உருவாக்கி இப்பொழுது நாடு முழுவதும் ஏழைகளின் மருத்துவப் படிப்பு கனவுகளாகவே இருக்கும் நிலையில் உருவாகி உள்ளது.

மிகவும் அதிக வசதி படைத்த பணக்கார குழந்தைகள் பல லட்சக்கணக்கில் செலவு செய்து பயிற்சி பெற்று தேர்வாகி வருகிற அளவுக்கு நாடு முழுவதும் நீட் நிலைப்பாட்டில் பாதித்திருக்கிறார்கள்.

ஏழ்மை குடும்பங்களைச் சேர்ந்த மாணவ - மாணவியர் பாதிக்கும்வகையில்ஒன்றிய அரசு 2018 பாராளுமன்றத்தில் நீட்டுக்கு ஆதரவான தீர்மானம் கொண்டு வந்த பொழுது ராஜ்யசபாவில் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து தி.மு.க. குழு துணைத் தலைவர் திருச்சி சிவா தீர்மானம் கொண்டு வந்தார். மற்ற கட்சிகள் எல்லாம் ஏற்று கொண்டனர் .

ஆனால் பாரதிய ஜனதா கட்சியின் அச்சுறுத்தல் மிரட்டலுக்கு பயந்து எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த நேரத்தில் ராஜ்யசபா வாக்கெடுப்பில் நீட் ஆதரவு தீர்மானத்தை ஆதரித்து அ.தி. மு.க. எம்.பி.க்களை வாக்களிக்க வைத்தார். அப்பொழுது அ.தி.மு.க.வுக்கு 13 எம்.பி.க்கள் ராஜ்யசபாவில் இருந்தார்கள்.

அவர்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவாக நீட்டை ஆதரித்து அ.தி.மு.க. வாக்களித்ததால் தான் இந்தியா முழுவதும் நீட் என்கிற அரக்கனை கொண்டு வருவதற்கு காரணமாகும்.

இப்பொழுது போலியாக ஒரு கற்பனை நாடகத்தை அரங்கேற்றி நீட்டுக்கு எதிராக பேசுவது போல் நாடகம் போடுகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

இந்தியாவில் ஒட்டுமொத்த மருத்துவப் படிப்பு படிக்கும் மாணவ - மாணவிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்த இயக்கம் தி.மு.க.

நீட்டுக்கு எதிராக கடுமையாக நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்துகிறது தி.மு.க.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுமார் ஒரு கோடி மக்களிடம் நீட்டுக்கு எதிரான கையெழுத்தை பெற்று ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பினார்.

தொடர்ந்து நீட்டை எதிர்த்து குரல் கொடுக்கும் சமூக நீதியை காத்த திராவிடமாடல் அரசு வெகுவிரைவில் கல்வித் துறையை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நிரந்தரமாக நீட் எனும் அரக்கனை ஒழித்து காட்டுவார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.